**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சீர்காழி.**
**அசல் வழக்கு எண். 37/2022**

2025–ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 29–ம் நாள் புதன்கிழமை சாட்சியின் வாக்குமூலம், 2023–ஆம் ஆண்டு பாரதிய சாஷ்சிய அதிநியம் பிரிவுகளின் விதிமுறைகளின்படி திரு. மா. சந்திரமோகன், பி.ஏ., பி.எல்., மாவட்ட உரிமையியல் நீதிபதி, சீர்காழி, அவர்களால் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு பிரமாணம் செய்விக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| தேதி: | 29.10.2025 | | |
| பெயர்: | ராமச்சந்திரன் (PW–1 Cross ) | தகப்பனார் பெயர்: | சின்னப்பிள்ளை |
| கிராமம்: | கொண்டல் | தாலுக்கா: | சீர்காழி |
| தொழில்: | விவசாயம் | வயது : | 55/2025 |

**<u>பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை : 29.10.2025</u>**
**(ஆரம்பித்த நேரம்–13.40)**

1. நான் பிரதிவாதிக்கு எந்த தேதியில் என்ன தொகை கொடுத்தேன் என்ற விபரம் தெரியுமா என்றால் தெரியும். மேற்படி விபரத்தை எனது நிரூபண வாக்குமூலத்திலும் நான் கூறியுள்ளேன். பிரதிவாதிக்கு எந்த தேதியில் கடன் கொடுத்தேன் என்றால் 15.07.2019ல் கடன் கொடுத்தேன். வேறு எந்த தேதிகளிலும் கடன் கொடுக்கப்படவில்லை. நான் பிரதிவாதியிடம் பலமுறை கடனை திருப்பி கேட்டதாக முதல் விசாரணையில் கூறியுள்ளேன் என்றால் சரிதான். எந்தெந்த தேதிகளில் கேட்டேன் என்றால் ஞாபகமில்லை.

2. பிரதிவாதிக்கு நான் யார் முன்பு கடன் கொடுத்தேன் என்றால் முருகன் என்பவர் முன்பாக கடன் கொடுத்தேன். மேற்படி விபரத்தை எனது முதல் விசாரணையில் கூறியுள்ளேனா என்றால் கூறியுள்ளேன். நான் மேற்படி விபரத்தை முதல் விசாரணையில் கூறாமல் வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1 ல் உள்ள கையெழுத்து பிரதிவாதியின் கையெழுத்துதான் என்பதை உறுதி செய்ய பிரதிவாதியிடமிருந்து வேறு ஆவணம் பெற்று இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ளேன். அதுபோல் எந்த

ஆவணமும் தாக்கல் செய்யாமல் வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

3. எனது முதல் விசாரணையில் கடந்த 05.05.2018ல் பிரதிவாதி கடனை திருப்பி கொடுத்துவிட்டார் என்ற விபரத்தை கூறவில்லை என்றால் அவர் கடனை திருப்பி கொடுக்கவில்லை, அதனால் கூறவில்லை. அதனை நிரூபண வாக்குமூலத்தில் குறிப்பிட்டுள்ளேன். நான் அதுபோல் ஏதும் கூறாமல் வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. 05.05.2018ல் பிரதிவாதி என்னிடமிருந்து கடன் வாங்கியதற்கு கடனுறுதி சீட்டு எழுதிக்கொடுத்தார், அதனை இந்த நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன், அது வா.சா.ஆ.1 ஆகும்.

4. நான் அறிவிப்பு அனுப்பியபிறகு பிரதிவாதியை நான் நேரில் சந்தித்தபோது, பிரதிவாதி என்னிடம் பணம் தான் கொடுக்கப்பட்டுவிட்டது, பிறகு ஏன் அறிவிப்பு அனுப்பினீர்கள் என்று கேட்டதற்கு, நான் தவறுலாக அனுப்பினேன் என்று கூறினேன் என்றால் சரியல்ல. தாவா கடன் தேதியில் பிரதிவாதி எவ்வித கடனுறுதி சீட்டும் எழுதி கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1 ல் உள்ள கையெழுத்து பிரதிவாதியினுடையது அல்ல என்றால் சரியல்ல

5. நான் கடன் கொடுத்தது என்பது ரூ. 1000/- நோட்டாக 60 நோட்டுக்கள் கொடுத்தேன். நான் விவசாயம் செய்து வருகிறேன். நான் அரசு அனுமதியுடன் வட்டித்தொழில் செய்து வருகிறேன் என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். நான் வருமான வரி தாக்கல் செய்யும் நபர் அல்ல. நான் கடன் கொடுப்பது சம்மந்தமாக வரவு, செலவு நோட்டு வைத்துள்ளேன் என்றால் என்னிடம் இல்லை.

பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுக்கோளுக்கு இணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்தி வைக்கப்படுகிறது.

**(முடிவு நேரம்- 13.54)**